සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

මගේ අංකය / எனது இல / My No: DSD/140/CBO/04 | ඔබේ අංකය / உமது இல / Your No: ........ | දිනය / திகதி / Date: 2017/08/03

சகல மாவட்ட செயலாளர் / மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி முகாமையாளர்கள்,
சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் தலைவர்களும் செயலாளர்களும்,
சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்களும் செயலாளர்களும்,

சமுர்த்தி சுற்றறிக்கை சமுதாய அடிப்படை : பிரஜாசக்தி/04/2017/04

சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கு,

**<u>“ சமுர்த்தி பிரஜா சக்தி – 2017 ” தேசிய சம்மேளனம்</u>**

2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சமுர்த்திச் சட்டத்தின் 23வது பிரிவிற்கு அமைய உருவாக்கப்பட வேண்டிய சமுர்த்தி சம்மேளனத்தின் பொருட்டு வெளியிடப்பட்டுள்ள 2017.08.03ஆந் திகதிய பிரஜாமூல/04/2017/04ம் இலக்க சுற்று நிருபத்தின் 03.01 பந்திக்கமைய தங்களது மாவட்டத்தின் சகல பிரதேசமட்ட சமுர்த்தி அமைப்புக்களினதும் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்களை 2017.08.23ஆந் திகதி காலை 8.00 மணிக்கு கொழும்பு

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්) / பணிப்பாளர் ( மனிதவளம்) / Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | Hot Line: 011- 28877 |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | | |

தாமரைத்தடாக அரங்கிற்கு சமூகமளிக்கச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தங்களை தயவாய் வேண்டுகின்றேன்.

02. இச் சமுர்த்தி பிரஜா சக்தி 2017 தேசிய சம்மேளனத்தின் 2013 ஆம் ஆண்டின் 01ம் இலக்க சமுர்த்திச் சட்டத்தின் 24வது பிரிவிற்கு அமைய சமுர்த்தி அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கான கொள்கை தீர்மானங்களை எடுப்பதற்காக கௌரவ அமைச்சரினால் முன்வைக்கப்பட்டுள்ள இணைப்பு 01இல் உள்ளடங்கியுள்ள முன்மொழிவுகளை 2017.08.15ஆந் திகதிக்கு முன்னர் தங்களது மாவட்ட சமுர்த்திக் குழுவிற்கு முன்வைத்து அதற்கான சம்மதத்தினை/ சம்மதமின்மையைப் பெற்று 2017.08.18ஆந் திகதிக்கு முன்னர் சமுதாய அடிப்படைப் பிரிவிற்கு உரிய முறைப்படி தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்க கட்டாயமாக நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

03. கௌரவ அமைச்சர் அவர்களினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு மேலதிமாக சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கான கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு தேவையான யோசனைகள் மற்றும் கருத்துக்களை மாவட்ட சமுர்த்தி குழுவின் அங்கீகாரத்துடன் முன்மொழிவுகளை உள்ளடக்கிய அறிக்கையினை 2017.08.18ஆந் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்க கட்டாயமாக நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

04. இச் சமுர்த்தி பிரஜா சக்தி 2017 தேசிய சம்மேளனத்திற்கு பிரதேசமட்ட சமுர்த்தி அமைப்புக்களின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர்களை பங்குபற்றச் செய்யும்போது ஆண்கள் வெள்ளை/ இளநீலத்திலான தேசிய உடையிலோ அல்லது வெள்ளை/ இளநீலத்திலான சேட் உடன் கருப்பு/ நீலம் அல்லது அவ்வாறான கடும் நிறத்திலான நீள காற்சட்டை அணிந்து வருமாறும் பெண்கள் வெள்ளை அல்லது இள நிறத்திலான சாரியினை அணிந்து வருமாறும் அதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குமாறும் வினயமுடன் வேண்டுகிறேன்.

05. இச்சமுர்த்தி தேசிய சம்மேளனத்திற்கு தங்களுடன் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர், சமுதாய அடிப்படை அமைப்புக்களின் விடயப்பொறுப்பு முகாமையாளர் மற்றும் அதற்கான சமுதாய அடிப்படை உத்தியோகத்தரையும் கலந்து கொள்ளச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வேண்டுகிறேன்.

06. 2017.08.23ஆந் திகதி சமுர்த்தி தேசிய சம்மேளனத்தில் கலந்து கொள்ளும் தங்களது மாவட்டத்திற்குரிய சகல பிரதேச சமுர்த்தி அமைப்புக்களினதும்

தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மேற்படி பந்தி 05இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்வதுடன், இம் மக்கள் அமைப்பின் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து அல்லது வேன் ஒன்றிற்காக செலவாகும் பிரயாணச் செலவினையும் அதற்கு மேலதிகமாக சமுதாயமட்ட உறுப்பினர்களுக்கு மாத்திரம் ரூபா.1500க்கு மேற்படாத விதத்தில் உபசாரச் செலவினை (காலை, பகல் உணவு உட்பட) சமுதாய அடிப்படை அமைப்பின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளுமாறும் அதற்காக செலவாகும் தொகையினை 2017.08.12ம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் கோருமாறு வேண்டுகிறேன்.

07. சமுதாயமட்ட அமைப்பின் உறுப்பினர்களை இச் சமுர்த்தி தேசிய சம்மேளனத்தில் கலந்து கொள்ளும்போது அவர்களை ஒரு இடத்திற்கு அழைத்து பேருந்து/ வேன் அல்லது பொதுப் போக்குவரத்து முறையின் மூலம் கொழும்பு தாமரை தடாக அரங்கிற்கு அழைத்து வந்ததன் பின்னர், தலைமைக் காரியாளயத்தின் ஏற்பாட்டுக் குழுவினரிடம் ஒப்படைப்பதுடன் அவர்கள்களை ஆசனங்களில் அமரச்செய்ததன் பின்னர், அவர்கள் எவ்விடத்தில் அமர்ந்துள்ளார்கள் என்பதை அவதானிப்பதுடன், சம்மேளன நடவடிக்கைகள் அனைத்தும் முடிவடைந்த பின்னர் பொருத்தமான இடத்திற்கு அவர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கான போக்குவரத்து வசதியினை வழங்கி அவர்களின் வீடுகளுக்கு மிகவும் பாதுகாப்பான முறையில் மீண்டும் அழைத்துச் செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது தங்களது பூரண கண்காணிப்புடன் மேலே 05வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தவிர்க்க முடியாத கட்டாய கடமை என்பதனையும் தயவாய் அறியத்தருகின்றேன். இச் செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக சகல சமுதாயமட்ட உறுப்பினர்களினதும் தொலைபேசி இலக்கங்களை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்ள ஆலோசனை வழங்கப்படுகின்றது.

08. அன்றைய தினம் வருகைதரும் சமூகத் தலைவர்களின் பெயர்ப் பட்டியலை இணைப்பு இல.02 இன் பிரகாரம் தயாரித்து பங்குபற்றும் திகத்திற்கான அவர்களின் ஒப்பத்தினையும் பெற்று தலமைக் காரியாலயத்தின் ஏற்பாட்டுக் குழுவினரிடம் அதனை ஒப்படைத்தல் வேண்டும் என்பதனை சம்பந்தப்பட்ட அழைத்துவரும் உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தவும்.

இச் சமுர்த்தி பிரஜாசக்தி 2017 தேசிய சம்மேளனம் வெற்றி பெறுவதற்கு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினை பெரிதும் மதிக்கின்றேன்.

பீ.ஆர்.டி.எச். அனுரவன்ஷ,

பிரதிப்பணிப்பாளர் (சமுதாயமட்ட அமைப்புப் பிரிவு)

பிரதிப்பணிப்பாளர் (ப/க) – குறு நிதிப்பிரிவு

பணிப்பாளர் நாயகத்தின் பொருட்டு.

**பிரதிகள்:**

1. செயலாளர், சமூக வலுவூட்டல், நலனோம்புனை மற்றும் மரபுரிமைகள் அமைச்சு – தகவலுக்காக.
2. மாவட்ட செயலாளர்/ மாவட்ட மேலதிக பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக
3. பணிப்பாளர் (மனிதவள மற்றும் நிர்வாகம்) – தகவலுக்காக/ உரிய நடவடிக்கைகாக
4. பிரதான கணக்காளர் – தகவலுக்காக/ உரிய நடவடிக்கைகாக